


**10.09.2024**

**தலைப்புச் செய்திகள்**

- கல்வி நிறுவனங்களில் ஆய்வுகளை ஊக்குவிக்கும் அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி நிறுவனத்தின் முதலாவது கூட்டம் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்று வருகிறது.
- 2. தேச பாதுகாப்பின் முக்கிய அங்கமாக சைபர் பாதுகாப்பு திகழ்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டில் 2 ஆயிரத்து 660 கோடி ரூபாய் முதலீட்டில் அமெரிக்க நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.
- பால் உற்பத்தி தற்போது தமிழகத்தில் பெருமளவு அதிகரித்திருப்பதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.
- முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப்போட்டிகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று தொடங்கின.

**இனி விரிவான செய்திகள்**

***********

**அனுசந்தன்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் புதிதாக உருவாக்கப்பட்ட அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை நிறுவனத்தின் முதலாவது கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்று வருகிறது.

மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திரபிரதான் மற்றும் உயர் அதிகாரிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

தேசிய கல்வி கொள்கை 2020-ன் பரிந்துரையின்படி உருவாக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு, நாட்டின் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சியை ஊக்குவித்து, படைப்பாற்றல் திறன், ஆய்வு, ஆய்வக திறன்களை மேம்படுத்துவதற்கான நடைமுறைகளை இலக்காக கொண்டுள்ளது.

நாட்டின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி பாதைக்கான, உயர் தொழில்நுட்ப நடைமுறைகள் மற்றும் நிலைப்பாடுகளுக்கான ஆலோசனைகளை இம்மையம் வழங்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

***********

**பிரதமர்**

செமிகண்டெக்டர் எனப்படும் மின்குறைகடத்தி துறை மேம்பாட்டிற்கான செமிகான் இந்தியா 2024 மாநாட்டை பிரதமர் திரு.நரேந்திரமோடி நொய்டா நகரில் நாளை தொடங்கிவைத்து சிறப்புரையாற்றுகிறார்.
நம் நாட்டை செமி கண்டெக்டர் உற்பத்தி மையமாக மேம்படுத்துவதற்கான நிலைப்பாடுகளும் கொள்கைகளும் இந்த மூன்று நாள் மாநாட்டில் விரிவாக ஆராயப்பட உள்ளது.
சர்வதேச நாடுகளின் மின்குறைகடத்தி பிரிவின் தலைவர்களும் இதில் பங்கேற்க உள்ளனர்.

செமிகான் மாநாடு இப்பிரிவின் தலைவர்கள், தொழிற்சாலைகள், நிபுணர்கள், வல்லுநர்களை ஒருங்கிணைக்கும் தளமாக திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக பல்வேறு நாடுகளின் செமி கண்டெக்டர் உற்பத்தி படைப்புகள் காட்சிபடுத்தப்பட உள்ளன.
24 நாடுகளை சேர்ந்த 250 செமிகண்டக்டர் தொழில் நிறுவனங்கள் இதில் பங்கேற்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் முதல்முறையாக இத்தகைய மாநாடு நடைபெறுவதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை செயலர் திரு.கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

***********

**அமித்ஷா**

தேச பாதுகாப்பின் முக்கிய அங்கமாக சைபர் பாதுகாப்பு திகழ்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.
புதுதில்லியில் சைபர் குற்ற தடுப்பு ஒருங்கிணைப்பு மையத்தின் முதலாவது நிறுவன நாள் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அமைச்சர் சைபர் குற்றங்களை கையாள ஐந்தாயிரம் அதிரடி படையினருக்கு அடுத்த ஐந்தாண்டுகளுக்கு உயர் தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்படும் என்றார்.

சைபர் பாதுகாப்பிற்கான தொழில்நுட்பங்கள் இன்றி நம் நாடு இத்தருணத்தில் வளர்ச்சி பெற முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து சைபர் குற்றங்களை எதிர்கொள்ள அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

தொழில்நுட்பம் மூலம் நாட்டின் பொருளாதாரம் உத்வேகம் பெறும் அதேவேளையில், நாம் பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

இத்தகைய சவால்களை கையாள இந்திய சைபர் குற்ற தடுப்பு ஒருங்கிணைப்பு மையம் இன்றியமையா பங்கினை வகிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாகசைபர் குற்ற சவால்களை எதிர்கொள்ளும் முக்கிய பாதுகாப்பு தொழில்நுட்பங்களையும், நவீன மையத்தையும் அமைச்சர் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

சைபர் குற்ற தரவுகளுக்கான வலைதளம் மற்றும் அமலாக்க இயக்குனரகத்துடன் ஒருங்கிணைப்பிற்கான இணையதள செயல்பாடுகளும் இதில் அடங்கும்.

பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மத்திய காவல்துறை அமைப்புகளின் பயிற்சி பெற்ற நிபுணர்களை கொண்ட சைபர் குற்ற தடுப்பு அதிரடி படையையும் அமைச்சர் இன்று தொடங்கிவைத்தார்.

***********

முதலமைச்சர்

அமெரிக்காவின் Jabil மற்றும் Rockwell Automation முன்னனி தொழில் நிறுவனங்களுடன் 2 ஆயிரத்து 660 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தாகியுள்ளது.

இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஆட்டோ டெஸ்க் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்மூலம் 5 ஆயிரத்து 365 இளையோரின் வேலை வாய்ப்பிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

இதன்படி திருச்சியில் 5 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் Jabil நிறுவனத்தின் மின்னனு உற்பத்தி மையம் அமைய உள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

காஞ்சிபுரத்தில் 666 கோடி ரூபாய் மதிப்பீட்டில் Rockwell மின்னனு நிறுவனத்தின் விரிவாக்கமும் இடம்பெறுகிறது.

இளையோரின் திறன்களை மேம்படுத்தி குறு சிறு நடுத்தர நிறுவனங்கள், ஸ்டார்ட் அப் உள்ளிட்ட தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித்தன்மையை மேம்படுத்தும் வகையில் ஆட்டோ டெஸ்க் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இந்நிகழ்வில் மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா, தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை செயலர் திரு.வி.அருண்ராய் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

***********

மனோ தங்கராஜ்:

தமிழ்நாட்டில் பால் உற்பத்தி தற்போது அதிகரித்திருப்பதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.
வேலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் தற்போது 38 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுவதாக கூறினார்.
வாய்ஸ்

பால்வளத்துறை தற்போது லாபத்தில் இயங்குவதாக கூறிய அவர், ஆவின் பால் குறிப்பிட்ட நேரத்தில் வினியோகம் செய்யப்பட்டு வருவதாக எடுத்துரைத்தார்.

விவசாயிகள் கால்நடைகளை வாங்கி பால் உற்பத்தியை பெருக்க வங்கி கடன்கள் மூலம் நிதி உதவி வழங்கப்படும் என்றும் கூறினார்.
கால்நடை துறையை மேம்படுத்தும் வகையில் இளையோர் வங்கி கடன் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள அவர் அழைப்பு விடுத்தார்.

ஆவின் மூலம் தற்போது தரமான தயிர் மற்றும் கால்நடைகளுக்கு தரமான தீவனங்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக அவர் கூறினார்.
முன்னதாக வல்லண்டராமம் கிராமத்தில் பால் குளிரூட்டும் மையத்தை அமைச்சர் திறந்துவைத்தார்.
ழுழுழுழுழுழுழுழுழுழுழு
முதலமைச்சர் கோப்பை:
தமிழகத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் இன்று தொடங்கின.
சிவகங்கையில் இப்போட்டிகளை இன்று தொடங்கிவைத்து பேசிய மாநில இளைஞர் நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் விளையாட்டு துறைக்கு உயர் முன்னுரிமை வழங்கப்படுவதாக கூறினார்.

நெல்லையில், சட்டப்பேரவைத்தலைவர் திரு.அப்பாவு இப்போட்டிகளை துவக்கிவைத்து பேசுகையில், சிலம்பத்தை தேசிய போட்டிகளில் இணைக்க, தமிழக அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக கூறினார்.
அப்பாவு வாய்ஸ் - -

உதகையில் மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.க.ராமச்சந்திரன் இப்போட்டிகளை துவக்கிவைத்தார்.
நாமக்கல், தர்மபுரி மாவட்டங்களிலும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப்போட்டிகள் இன்று தொடங்கின.
இந்த விளையாட்டுப்போட்டிகள் மாநிலம் முழுவதும் வரும் 26ம் தேதி வரை நடைபெறுகின்றன.

***********

**அரசு பள்ளிகள்**

தமிழக அரசு பள்ளிகளில் கல்வி தரத்தை மேம்படுத்த ஆயிரத்து 86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 614 பள்ளிகளில் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

சென்னையில் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் 551 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் தொடங்கப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளது.

437 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

காலை உணவு, புதுமை பெண், தமிழ்புதல்வன், நான்முதல்வன் போன்ற சீர்மிகு திட்டங்களால் மாநிலத்தின் கல்வி தரம் சிறந்து விளங்குவதாகவும் அரசு கூறியுள்ளது.

தேசிய கல்வி நிறுவனங்களுக்கான தர வரிசை பட்டியலில் தமிழகத்தை சேர்ந்த 165 கல்லூரிகள் இடம்பெற்றிருப்பது உயர்கல்வியில் தமிழகம் சிறந்து விளங்குவதை பறைசாற்றுவதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

***********

**மாங்கனி கண்காட்சி**
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அகில இந்திய மாங்கனி கண்காட்சி வரும் 13ஆம் தேதி தொடங்குகிறது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

## வாய்ஸ்

***********

**இருவரி**

**காஞ்சிபுரம் மாவட்டம் பஞ்சுபேட்டையில் 84 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக** கட்டப்பட்ட வேளாண் சந்தை நுண்ணறிவு உழவர் ஆலோசனை மையத்தை மாநில சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தாமோ அன்பரசன் இன்று திறந்துவைத்தார்.

***********

**ஹாக்கி**

சீன Hulunbuir-இல் நடைபெறும் ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி சேம்பியன் பட்ட போட்டியில் இந்தியா நாளை மலேசியாவை எதிர்கொள்கிறது.

***********

**தடகளம்**

தெற்காசிய ஜூனியர் தடகள சேம்பியன் பட்ட போட்டிகள் சென்னையில் நாளை தொடங்குகின்றன.

வரும் 13ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டிகளில் இந்தியா நேபாளம் பூடான் மாலத்தீவு உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

***********

**பாராலிம்பிக்**

பாரீஸில் நடைபெற்ற பாராலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற இந்திய வீர வீராங்கனைகள் இன்று நாடு திரும்பினர்.

புதுதில்லி விமான நிலையத்தில் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இப்போட்டிகளில் இந்தியா 7 தங்கம் 9 வெள்ளி 13 வெண்கலம் உட்பட 29 பதக்கங்களை வென்றது குறிப்பிடத்தக்கது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது